பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
30 01 2026 12 40
வெள்ளிக்கிழமை நண்பகல்

## ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினம் இன்று தியாகிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
   ** தில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தியடிகளின் நினைவிடத்தில் குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

2. விமான வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான மையமாக இந்தியாவை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

3. வெனிசுலாவின் வான்பகுதி பயணிகள் விமானங்களுக்காக திறக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

4. சத்தீஷ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 4 மாவோயிஸ்ட்கள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

5. ஹைதராபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் விஷ்ணுவர்தன் – சாய் கார்த்திக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---இனி விரிவான செய்திகள்---

மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினம் இன்று தியாகிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தியடிகளின் நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, ராஜ்காட்டில் சர்வமத பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், அவரது அஹிம்சை, நேர்மை, தன்னலமற்ற சேவை தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், காந்தியடிகளின் சுதேசி கொள்கை சுயசார்பு இந்தியாவுக்கு அடிப்படையாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்திற்காக போராடிய காந்தியடிகளின் அர்ப்பணிப்பு நாட்டு மக்களுக்கு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் கூறியுள்ளார்.

மகாத்மா காந்தியின் அஹிம்சை, எளிமை, சமத்துவ கொள்கைகள் நமக்கு என்றென்றும் வழிகாட்டுவதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி காலை 11 மணிக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அரசு அலுவலகங்களில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

>>><><><><<<

விமான வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான மையமாக இந்தியாவை மாற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்கு அதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார்.

இந்தியாவில் இளைஞர்கள் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்த ஊக்கமளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

உலகளாவிய சிவில் விமான உற்பத்தி மையமாக இந்தியா மாறிவிட்டதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் உடான் திட்டத்தின் மூலம் 100 விமான நிலையங்கள் செயல்பட்டு வருவதாக கூறிய அவர், இதன் மூலம் லட்சக்கணக்கான பயணிகள் பலனடைந்து வருவதாக தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் அடுத்த மூன்றாண்டுகளில் 120 இடங்களை இணைப்பதன் மூலம் 4 கோடி பயணியர் பயன்பெறுவர் என்று அவர் கூறினார்.

*விமான ஓட்டுநர் பயிற்சி மையங்கள் மூலம் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.*

*>>><><><><<<*

*இந்தியா – அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் புதுதில்லியில் நாளை தொடங்குகிறது.*

*இதற்கு முன்னதாக, செயலாளர்கள் அளவிலான கூட்டம் இன்று புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த கூட்டம் நடைபெறுவது முக்கியத்துவம் பெறுகிறது.*

*அரபு நாடுகள், வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட 22 உறுப்பு நாடுகள் இந்த கூட்டத்தில் பங்கேற்கின்றன.*

*அர்மேனியா, பிரேசில், கிரீஸ், வெனிசுலா, எரித்ரியா மற்றும் Chad நாடுகள் இந்த கூட்டத்தில் பார்வையாளர்களாக பங்கேற்கவுள்ளனர்.*

*இதில் பங்கேற்பதற்காக சோமாலியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் Abdisalam Abdi Ali இந்தியா வந்துள்ளார்.*

*அவரது வருகை இருநாடுகளின் நட்புறவை வலுப்படுத்தும் என்று வெளியுறவுத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.*

*கத்தார் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் Sultan Bin Saad Al Muraikhi, லிபியாவின் வெளியுறவு அமைச்சர் Eltaher S M Elbaour ஆகியோரும் இந்தியா வந்துள்ளனர்.*

*>>><><><><<<*

*இந்தியாவின் மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் நகரங்களில் வசிப்பதாக சர்வதேச தரவுகள் சுட்டிக்காட்டி இருப்பதாக பிரதமரின் பொருளாதார ஆலோசகர் குழு உறுப்பினர் டாக்டர் ஷாமிகா ரவி கூறியுள்ளார்.*

சென்னையில் இன்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், மக்கள் தொகை கணக்கெடுப்பில் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்பட்டாலும் செயற்கைக்கோள்களின் மூலம் கிடைக்கும் தகவலின் அடிப்படையில் தரவுகள் வேறுபடுவதாக தெரிவித்தார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது அடுத்த பத்தாண்டுகளுக்கான பொருளாதார விகிதங்கள் கணக்கிடப்படுகின்றன என்று அவர் கூறினார்.

ஒவ்வொரு பகுதியிலும் நேரடியாக எடுக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்புகளை விட, செயற்கைக் கோள்களின் அடிப்படையில் எடுக்கப்படும் கணக்கெடுப்புகள் துல்லியமாக காணப்படுவதாகவும் அதனை கணக்கில் கொண்டு பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக நாடுகளை ஒப்பிடுகையில், நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாக டாக்டர் ஷாமிகா ரவி கூறினார்.

>>><><><><<<

வெனிசுலாவின் வான்பகுதி பயணிகள் விமானங்களுக்காக திறக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க பொதுமக்கள் எளிதாக வெனிசுலா செல்லும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்காக போக்குவரத்துத்துறை செயலர் மற்றும் அமெரிக்க ராணுவ உயர் அதிகாரிகளிடம் வெனிசுலா வான் எல்லையை திறக்க தாம் உத்தரவிட்டதாக அவர் கூறினார்.

வெனிசுலாவுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்க குடிமக்களிடம் அமெரிக்க அரசு எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், திரு. டோனல்ட் ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்கா-வெனிசுலா இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்க அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விருப்பம் அளித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டில் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் வெனிசுலாவுக்கான விமான சேவையை ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது.

>>><><><><<<

*சத்தீஷ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 4 மாவோயிஸ்ட்கள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.*

*இரண்டு பெண்கள் உட்பட நான்கு மாவோயிஸ்டுகள் சரணடைந்ததாக Bastar மண்டல காவல்துறை தலைவர் திரு சுந்தர்ராஜ் தெரிவித்துள்ளார்.*

*சரணடைந்த மாவோயிஸ்டுகள் அவர்களிடம் இருந்த நான்கு துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை காவல்துறையிடம் ஒப்படைத்தனர்.*

*அரசின் சிறப்பு திட்டத்தை ஏற்றுக்கொண்டு இந்த மாவோயிஸ்டுகள் சரணடைந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

>>><><><><<<

*இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான திருமதி பி டி உஷாவின் கணவர், கபடி வீரர் சீனிவாசனின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*இதுதொடர்பாக பிரதமர் வலைதளப் பதிவில், திருமதி பி டி உஷாவிடம் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள செய்தியில், திருமதி பி டி உஷாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.*

>>><><><><<<

*இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய இந்த நிதியத்தின் பொருளாதார ஆலோசகர் Pierre Olivier, உலக நாடுகளுக்கு இடையே வர்த்தகத்தை மேம்படுத்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுவதை சுட்டிக்காட்டினார்.*

உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் போது, நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உடன்பாடுகள் முக்கியமானது என்றும் *Pierre Olivier* தெரிவித்தார்.

>>><><><><<<

ஐநா பாதுகாப்புக் குழுவில் ஆசியாவை சேர்ந்த நாடுகளின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதாக ஐநா பொதுச் செயலாளர் திரு அண்டோனியோ குட்ரஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை உடனடியாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அமைதி மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையில் ஐநா செயல்பட்டு வருவதாகவும், உலக அமைதியை நிலைநாட்டுவதில் அனைத்து நாடுகளின் பிரதிநிதித்துவம் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐநா பாதுகாப்புக் குழுவில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு விண்ணப்பித்திருந்ததை சுட்டிக்காட்டிய அவர், பெரும்பாலான உறுப்பினர்கள் இதனை விரும்புவதாக தெரிவித்தார்.

இந்த சீர்திருத்தத்தை எதிர்க்கும் சில நாடுகளின் கருத்துக்களை தெரிவித்த அவர், பேச்சு வார்த்தையின் மூலம் இதற்கான முடிவு காணப்பட வேண்டும் என்றார்.

நிரந்தர உறுப்பு நாடுகள் தங்களது அதிகாரத்தை சுயநலத்திற்காக பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும் திரு அண்டோனியோ குட்ரஸ் கூறினார்.

>>><><><><<<

விளையாட்டுச் செய்திகள்

ஹைதராபாத்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் விஷ்ணுவர்தன் – சாய் கார்த்திக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, *6-3, 7-5* என்ற செட்கணக்கில் இந்தியாவின் அர்ஜூன் ரதி – *Caheer Warik* இணையை வென்றது.

----------------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தருண் மணப்பள்ளி இன்று சீனாவின் Xuan Chen Zhu-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தேவிகா சிஹாக் இன்று தாய்லாந்தின் Supanida Katethong-ஐ எதிர்கொள்கிறார்.

-----------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

>>><<<